**நவம்பர் – 18**

# தேசியச் செய்திகள்

## தென் இந்தியாவின் முதல் வந்தே பாரத் இரயில்

- சென்னை-மைசூரு இடையிலான வந்தே பாரத் விரைவு இரயிலினைப் பெங்களூருவில் உள்ள கிராந்திவீர சங்கொல்லி ராயண்ணா இரயில் நிலையத்திலிருந்துப் பிரதமர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.
- இது இந்தியாவின் ஐந்தாவது வந்தே பாரத் விரைவு இரயில் மற்றும் தென்னிந்தியாவின் முதல் வந்தே பாரத் இரயில் ஆகும்.
- இந்த இரயிலானது பெங்களூரு வழியாக மைசூரையும் சென்னையையும் இணைக்கச் செய்றது.
- கிராந்திவீர சங்கொல்லி ராயண்ணா இரயில் நிலையத்திலிருந்துத் தொடங்கப்படும் பாரத் கௌரவ் காசி தர்ஷன் இரயிலையும் பிரதமர் அவர்கள் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.
- பாரத் கௌரவ் என்ற திட்டத்தின் கீழ் இந்த இரயில் சேவையினைத் தொடங்கிய முதல் மாநிலம் கர்நாடகா ஆகும்.
- இந்த இரயில் வாரணாசி, அயோத்தி மற்றும் பிரயாக்ராஜ் உள்ளிட்ட பல்வேறு புனித இடங்களை இணைக்கிறது.



## இந்தியாவின் முதல் தேசிய உயிர் அறிவியல் தரவுக் களஞ்சியம்

- இந்தியாவின் முதல் தேசிய உயிர் அறிவியல் தரவுக் களஞ்சியமானது சமீபத்தில் தொடங்கப் பட்டது.
- இந்தியாவில் அரசின் நிதியுதவி பெற்ற ஆராய்ச்சிகளிலிருந்து இந்தியாவின் முதல் தேசிய உயிர் அறிவியல் தரவுக் களஞ்சியமானது உருவாக்கப்பட்டது.
- இது ஹரியானாவின் ஃபரீதாபாத் பிராந்திய உயிரித் தொழில்நுட்ப மையத்தில்


நிறுவப் பட்டது.

- இது நான்கு பெட்டாபைட் சேமிப்புத் திறனைக் கொண்டுள்ளது மட்டுமல்லாமல் இது 'பிரம்' எனப்படும் உயர் செயல்திறன் கொண்ட கணினி மையத்தினையும் கொண்டு உள்ளது.




## சர்வதேசச் செய்திகள்

### உலகின் மிக நீளமான பயணிகள் இரயில்




- உலகின் மிக நீளமான பயணிகள் இரயிலினை அறிமுகப்படுத்திய நாடாக சுவிட்சர்லாந்து தற்போது மாறியுள்ளது.
- இந்த இரயிலில் 1910 மீட்டர்கள் நீளமான மற்றும் 4,550 இருக்கைகள் கொண்ட 100 பெட்டிகள் உள்ளன.
- 2022 ஆம் ஆண்டு அக்டோபர் 29 ஆம் தேதியன்று சுவிஸ் ஆல்ப் மலைத் தொடரில் உள்ள மலைப் பாங்கான நிலப்பரப்பு வழியாக இந்த இரயிலானது இயக்கப்பட்டது.

- சுவிட்சர்லாந்தின் இரயில்வே அமைப்பின் 175வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் விழாவில் இந்த இரயில் சேவை தொடக்கம் குறித்து அறிவிக்கப்பட்டது.

## நாசிசம் மற்றும் நியோ நாசிசத்திற்கு எதிரான ஐக்கிய நாடுகளின் தீர்மானம்

- ரஷ்யாவால் முன்வைக்கப்பட்ட 'நாசிசத்தை மகிமைப்படுத்துவதைத் தடுத்தல் மற்றும் நியோ நாசிசத்தை எதிர்த்துப் போராடுதல்' எனப்படும் ஒரு வரைவுத் தீர்மானத்திற்கு ஆதரவாக இந்தியா வாக்களித்துள்ளது.
- இனவெறி, இனப் பாகுபாடு, வெளிநாட்டவர் மீதான வெறுப்புணர்வு மற்றும் அதனுடன் தொடர்புடைய சகிப்புத் தன்மையின்மையின் இதர சமகால வடிவ பிரச்சினைகளைத் தூண்டுவதற்கு பங்காற்றும் பிற நடைமுறைகளும் இதில் அடங்கும்.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் வாக்கெடுப்புக்குச் சமர்ப்பிக்கப்பட்ட இந்த வரைவுத் தீர்மானத்திற்கு இந்தியா உட்பட 105 நாடுகள் ஆதரவு அளித்தன.
- 52 நாடுகள் (பெரும்பாலும் வடக்கு அட்லாண்டிக் ஒப்பந்த அமைப்பு மற்றும் ஐரோப்பிய நாடுகள்) இதற்கு எதிராக வாக்களித்த நிலையில், 15 நாடுகள் வாக்களிப்பதில் இருந்து விலகின.




## BIMSTEC அமைப்பின் 2வது வேளாண் அமைச்சர்கள் கூட்டம்





- மத்திய வேளாண் அமைச்சர் நரேந்திர சிங் தோமரின் தலைமையில் BIMSTEC அமைப்பின் 2வது வேளாண் அமைச்சர்கள் சந்திப்பினை இந்தியா நடத்தியது.

- பூடான், வங்காள தேசம், நேபாளம், மியான்மர், இலங்கை மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளின் வேளாண் அமைச்சர்கள் இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர்.
- இந்த மாநாட்டில் BIMSTEC அமைப்பின் உறுப்பினர் நாடுகளுக்கு இடையே வேளாண் ஒத்துழைப்பை (2023-2027) வலுப்படுத்தச் செய்வதற்கான செயல் திட்டம் ஒன்று ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- BIMSTEC அமைப்பானது 1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இதில் வங்காள தேசம், பூடான், இந்தியா, நேபாளம், இலங்கை ஆகிய ஐந்து தெற்காசிய நாடுகளும், மியான்மர் மற்றும் தாய்லாந்து ஆகிய இரண்டு தென்கிழக்கு ஆசிய நாடுகளும் அடங்கும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## அச்சுறுத்தல் நிலையில் உள்ள பனிப்பாறைகள்





- யுனெஸ்கோ அமைப்பின் ஆய்வின்படி, யுனெஸ்கோ அமைப்பின் உலகப் பாரம்பரியப் பட்டியலில் உள்ள பனிப்பாறைகளில் மூன்றில் ஒரு பங்கு அச்சுறுத்தல் நிலைக்கு உள்ளாகியுள்ளது.
- இந்தப் பனிப்பாறைகள் ஆனது, CO2 உமிழ்வுகள் காரணமாக ஏற்படும் வெப்ப மயமாதலுக்கு இட்டுச் செல்லும் வெப்ப நிலையினால் 2000 ஆம் ஆண்டிலிருந்து துரிதமான வேகத்தில் உருகி வருகின்றது.
- யுனெஸ்கோ அமைப்பின் உலகப் பாரம்பரியத் தளங்களில், பூமியின் மொத்த பனிப்

பாறைகளில், கிட்டத்தட்ட 10% அளவில் 50 பனிப்பாறைகள் உள்ளன.

- அவற்றுள் மிக உயர்ந்த (எவரெஸ்ட் சிகரத்திற்கு அடுத்த நிலையில் உள்ள), மிக நீளமான (அலாஸ்காவில் உள்ள) மற்றும் ஆப்பிரிக்காவில் கடைசியாக மீதமுள்ள பனிப் பாறைகள் ஆகியவை அடங்கும்.
- யுனெஸ்கோ அமைப்பின் இந்த ஆய்வானது சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியத்துடன் (IUCN) கூட்டுறவைக் கொண்டு மேற்கொள்ளப் பட்டது.
- அவை தற்போது ஒவ்வோர் ஆண்டும் 58 பில்லியன் டன் பனியை இழந்து வருகின்றன.
- இது பிரான்சு மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகளின் ஒருங்கிணைந்த வருடாந்திரத் தண்ணீர் பயன்பாட்டிற்குச் சமமாகும்.
- உலகளாவியக் கடல் மட்ட உயர்விற்குக் கிட்டத்தட்ட 5% காரணம் இவையாகும்.
- ஆப்பிரிக்கா, ஆசியா, ஐரோப்பா, லத்தீன் அமெரிக்கா, வடக்கு அமெரிக்கா மற்றும் ஓசியானியா ஆகிய நாடுகளில் காணப்படும் பனிப்பாறைகள் அச்சுறுத்தல் நிலைக்கு உள்ளாகியுள்ளன.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உணவு மற்றும் வேளாண்மை நிலை அறிக்கை 2022




- உணவு மற்றும் வேளாண்மை நிலை (SOFA) என்பது ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) வெளியிடுகின்ற ஒரு வருடாந்திர முதன்மை அறிக்கைகளில் ஒன்றாகும்.
- அறிவியல் அடிப்படையிலான மதிப்பீட்டின் அடிப்படையில் உணவு மற்றும் வேளாண் துறை தொடர்பான பல்வேறு சிக்கல்கள் பற்றிய விரிவான நுண்ணறிவுகளை இது வழங்குகிறது.
- இது கிராமப்புறம் மற்றும் வேளாண் மேம்பாடு மற்றும் உலகளாவிய உணவுப் பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் வழங்குகின்ற பல்வேறு தலைப்புகளை உள்ளடக்கி உள்ளது.
- உலகம் முழுவதிலும் இருந்து பெறப்பட்ட பல்வேறு தொழில்நுட்பங்களைப் பிரதிநிதித் துவப்படுத்தும் 27 கள ஆய்வறிக்கைகளை இந்த அறிக்கை ஆய்வு செய்தது.
- இதில் 27 சேவை வழங்குநர்களில் 10 நிறுவனங்கள் மட்டுமே இலாபகரமாகவும், நிதி

ரீதியாகவும் நிலையானவையாக உள்ளன.

- பல்வேறு நாடுகளுக்கு இடையேயும், நாடுகளுக்குள்ளேயும் எந்திரமயமாக்கல் ரீதியிலான தொழில் நுட்பங்கள் பரவுவதில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் உள்ளன.
- இந்த நுட்பத்தின் ஏற்பானது, குறிப்பாக ஆப்பிரிக்காவின் துணை சஹாரா பகுதிகளில் குறைவாக உள்ளது.
- இந்தப் பகுதியில் மேற்கொள்ளப்படும் வேளாண்மையானது மனித மற்றும் விலங்கு சக்தியினைக் கொண்டு இயக்கப்படுவதால் அதன் உற்பத்தித்திறனானது கணிசமான அளவில் குறைவாக உள்ளது.
- இந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்காக என்று நிலையான வாடகை வாகன வழிமுறைகளை நிறுவுமாறு இந்த அறிக்கை பரிந்துரைக்கிறது.

# மாநிலச் செய்திகள்

## மாண்டியா திவாஸ் - ஒடிசா

- ஒடிசா மாநிலத்தில், 2022 ஆம் ஆண்டு நவம்பர் 10 ஆம் தேதியன்று மாண்டியா திவாஸ்/ (தினை வகைகள் நாள்) தினமானது கொண்டாடப்பட்டது.
- இது மாநிலம் முழுவதிலும் தினை சாகுபடி மற்றும் அதன் நுகர்வை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அம்மாநில மக்களின் நிலையை மேம்படுத்தவும், மக்களுக்குத் தேவையான ஊட்டச் சத்து கிடைக்கப் பெறுவதை உறுதி செய்யவும் வேண்டி ஒடிசாவில் தினை வகைகள் திட்டமானது தொடங்கப்பட்டது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது 2023 ஆம் ஆண்டினை சர்வதேச தினை ஆண்டு என்று அறிவித்துள்ளது.




# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## பெய்லி K. ஆஷ்ஃபோர்ட் பதக்கம்-2022

- பிரபல இந்திய மருத்துவரும் அறிவியலாளருமான டாக்டர் சுபாஷ் பாபுவுக்கு மதிப்பு மிக்க பெய்லி K. ஆஷ்ஃபோர்ட் பதக்கம் (2022) மற்றும் 2022 ஆம் ஆண்டிற்கான

அமெரிக்க வெப்பமண்டல மருத்துவம் மற்றும் சுகாதாரவியல் சமூகத்தின் உறுப்பினர் அந்தஸ்து (FASTMH) ஆகிய விருதுகள் வழங்கப்பட்டன.

- அவரது மகத்தான ஆராய்ச்சிப் பணி மற்றும் வெப்பமண்டல மருத்துவத்தில் அவர் ஆற்றியப் பங்களிப்பு ஆகியவற்றிற்காக இந்த விருதானது வழங்கப்படுகிறது.
- அமெரிக்க வெப்பமண்டல மருத்துவம் மற்றும் சுகாதாரவியல் சமூகம் என்பது வெப்ப மண்டல மருத்துவத் துறையில் புகழ்பெற்ற, உலகின் மிகப்பெரிய அறிவியல் அமைப்பு ஆகும்.
- வெப்பமண்டல மருத்துவத் துறையில் சிறப்பாக பணியாற்றும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இடைநிலை-தொழில்துறை-ஆய்வாளர்களுக்கு ஆண்டுதோறும் இந்தப் பதக்கமானது வழங்கப் படுகிறது.
- இந்த விருது வழங்கப்படத் தொடங்கிய 82 ஆண்டு கால வரலாற்றில், இதுவரை இந்திய அறிவியலாளர்களுக்கோ அல்லது ஒரு இந்திய நிறுவனத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிப் பணிகளுக்கோ இது வழங்கப்படவில்லை.




## சர்வதேச கிரிக்கெட் சபையின் புகழ் மன்றம்



- சர்வதேச கிரிக்கெட் சபையின் புகழ் மன்றத்தில் இடம் பெற்ற புகழ்பெற்ற கிரிக்கெட் ஜாம்பவான்களின் பட்டியலில் இணையும் சமீபத்திய ஜாம்பவான்களைச் சர்வதேச

கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

- இதில் மேற்கிந்திய அணியின் ஷிவ்நரைன் சந்தர்பால், இங்கிலாந்து மகளிர் அணியின் சார்லட் எட்வர்ட்ஸ் மற்றும் பாகிஸ்தான் அணியின் அப்துல் காதர் ஆகியோர் முறையே 107, 108 மற்றும் 109 ஆகிய இடங்களைப் பெற்றனர்.

# இதரச் செய்திகள்

## நெகிழ்திறன் கொண்ட உள்கட்டமைப்பிற்கான மேம்பாட்டு நிதி

- இது COP27 மாநாட்டில் பேரிடர்களைத் தாங்கும் உள்கட்டமைப்புக்கான கூட்டணியால் (CDRI) இந்தியா தரப்பில் அறிவிக்கப்பட்டது.
- இந்தப் பல்வேறு நன்கொடையாளர் கொண்ட அறக்கட்டளை நிதியம் ஆனது ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்ட அமைப்பு மற்றும் ஐக்கிய நாடுகளின் பேரிடர் இடர் குறைப்பு அலுவலகம் (UNDRR) ஆகியவற்றின் உதவியுடன் நிறுவப்பட்டது.
- இந்த நிதியானது, நியூயார்க்கில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகளின் பல பங்குதார அறக்கட்டளை நிதி அலுவலகத்தினால் (UN MPTFO) நிர்வகிக்கப்படும்.
- இந்த நிதியானது குறிப்பாக வளர்ந்து வரும் நாடுகள் மற்றும் சிறு தீவு நாடுகளில் பேரிடர்களைத் தாங்கும் திறன் கொண்ட உள்கட்டமைப்பு அமைப்புகளை உருவாக்கச் செய்வதற்கான உலகளாவிய முன்னெடுப்புகளுக்கு உதவும்.
- பேரிடர்களைத் தாங்கும் உள்கட்டமைப்புக்கான கூட்டணியானது, (CDRI) 2019 ஆம் ஆண்டில் நியூயார்க் நகரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் பருவநிலை நடவடிக்கை உச்சி மாநாட்டில் இந்தியப் பிரதமர் அவர்களால் தொடங்கப்பட்டது.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★